முக்கிய வார்த்தைகள்:
கடுமையான
மென்மையான
பதிலளிப்பது

இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
20 நவம்பர் 2026 / 10 ஜமாதில் ஆகிர் ஹிஜிரி 1448

மென்மையானத் தன்மை தான், மோதலுக்கான சரியானத் தீர்வு

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيلِ: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

ஜும்ரதல் மு:மினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கட்டளைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிவதன் மூலமும், அல்லாஹ்வினால் விலக்கப்பட்டவைகளைத் தவிர்ப்பதன் மூலமும் அல்லாஹ்வின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இஸ்லாத்தின் அழகைப் பிரதிபலிக்கத் தேவையான, **மென்மையானத்** தன்மையை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக அத்தன்மை, நமது நடத்தை, பேச்சு மற்றும் உள்ளம் ஆகிய அனைத்திலும் பிரதிபலிக்கட்டுமாக! ஆமீன், யா ரப்பல் ஆலமீன்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
பகைமை, வெறுப்பு, பிளவு மற்றும் மோதல் ஆகியவற்றால் அடிக்கடி நிறம் பூசப்படும் ஒரு உலகத்தில் நாம் வாழ்கிறோம்; அதே சமயம், பண்பட்ட

பேச்சும் உள்ளத்தின் **மென்மையும்** காண்பதற்கு அரிதாகி வருகின்றன. இவ்விதமாக, ”ரஹ்மத்” எனும் கருணைச் சிந்தனையின் பற்றாக்குறைக்கு மத்தியில், ஒரு மு஼மின் [ஓரிறை நம்பிக்கையாளர்] அமைதியற்ற நிலையை உணர்கிறார்; மேலும், "மோதலும் சண்டையும் நிறைந்த ஒரு உலகத்தில் நாம் எப்படி சமாதானத்தின் தூதுவர்களாக இருக்க முடியும்?" என்ற கேள்வியும் அவரிடம் ஏற்படக் கூடும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் உதாரணத்தை, முன்மாதிரியான ஒரு நடத்தையை இங்கு நாம் பார்ப்போம். அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: கிராமத்தில் வாழ்ந்த ஒரு மனிதர், இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, அவர்களின் மேலங்கியை மிகவும் பலமாகப் பிடித்து இழுத்தார்; அதனால் இறைத்தூதர் [ஸல்] அவர்களின் கழுத்தில் ஒரு தழும்பு ஏற்பட்டது. அந்த மனிதர், தனக்குச் சிறிது செல்வம் தருமாறு இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டார்.

அந்தக் கிராமத்து மனிதரின் இந்தக் **கடுமையானச்** செயலுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு **பதிலளித்தார்கள்?** அவர்கள் கோபமடைந்தார்களா, அந்த மனிதரைக் கண்டித்தார்களா, அல்லது அதே விதத்தில் பதிலடி கொடுத்தார்களா? நிச்சயமாக இல்லை. இந்தச் சம்பவத்தை அறிவிக்கும் நபித்தோழர் அனஸ் [ரலி) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்: “ இறைத்தூதர் [ஸல்] அவர்கள் புன்னகைத்தவாறே அவரை நோக்கித் திரும்பி, அந்த மனிதருக்கு ஏதேனும் ஒன்றைக் கொடுக்குமாறு தனது தோழர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி மற்றும் இமாம் முஸ்லிம் ரஹ்)

சுப்ஹானல்லாஹ் [அல்லாஹ் மேன்மையானவன்; பரிசுத்தமானவன்] இந்த ஹதீஸ் [சம்பவம்] மனதைத் தொடுவதோடு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தின் மற்றும் குணத்தின் அழகை நமக்கு நினைவூட்டுகிறது. அவர்கள் **கடுமையாக** நடத்தப்பட்டபோதிலும், **கடுமையாகப்** பதிலளிக்கவில்லை; **கடுமையாக** நடந்துகொள்வதற்கு, அந்த மனிதரின் **கடுமையை** ஒரு காரணமாகவும் அவர்கள் கருதவில்லை.

மாறாக, மன அழுத்தம் நிறைந்த இது போன்ற காலங்களில் சிறந்த மருந்தாக விளங்கும் **"மென்மை"** என்ற குணத்தை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

எனது சகோதரர்களே!

மற்றவர்கள் நம்மை நடத்தும் விதம் நம் கட்டுப்பாட்டில் இல்லையென்றாலும், அதற்குப் **பதிலளிப்பதற்கான** சிறந்த வழியை நம்மால் எப்போதும் தேர்ந்தெடுக்க முடியும். இது, திருக்குர்ஆனின் "ஆலி-இம்ரான்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 159-வது வசனத்தில் காணப்படும் வழிகாட்டுதலுடன் ஒத்துப்போகிறது:

فَبِمَا رَحْمَةٍ مِّنَ ٱللَّهِ لِنتَ لَهُمْ ۖ وَلَوْ كُنتَ فَظًّا غَلِيظَ
ٱلْقَلْبِ لَٱنفَضُّوا۟ مِنْ حَوْلِكَ ۖ فَٱعْفُ عَنْهُمْ وَٱسْتَغْفِرْ لَهُمْ

பொருள்: *"[முஹம்மது [ஸல்] அவர்களே] அல்லாஹ்வுடைய "ரஹ்மத்" எனும் அருளின் காரணமாகவே, நீர் அவர்களிடம் **மென்மையாக** நடந்து கொள்கிறீர்; [சொல்லில்] நீர் **கடுகடுப்பானவராகவும்**, கடின உள்ளம் கொண்டவராகவும் இருந்திருப்பீரானால் அவர்கள் உம்மை விட்டும் ஓடிப் போயிருப்பார்கள்; எனவே அவர்களின் [பிழைகளை] அலட்சியப்படுத்தி விடுவீராக; அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்பைத் தேடுவீராக"*

இருப்பினும், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் சாந்தமான, **மென்மையான** நடத்தையானது, நாம் செயலற்று இருந்து, மௌனமாகத் துன்பப்பட வேண்டும் என நமக்குக் கற்றுத் தரவில்லை; **மென்மை** என்பது பலவீனம் அல்ல; உண்மையில் அது வலிமையே ஆகும். அன்பான ஜமாஅத்தார்களே! அது என்ன வலிமை என்றால், கோபத்தை அடக்கும் வலிமையும், பொறுமையுடன் இருக்கும் திறனும் ஆகும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு, அந்த கிராமத்து மனிதரைத் தண்டிப்பதற்கான உடல் வலிமையும் சமூக அந்தஸ்தும் இருந்தது. ஆனாலும், அவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்தார்கள்; ஏனெனில், அந்த மனிதர் தீய எண்ணத்தினால் அவ்வாறு செயல்படவில்லை; அறியாமையின் காரணமாகவே அவ்வாறு செயல்பட்டார் என்பதை இறைத்தூதர்[ஸல்] அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆயினும், வரம்புகள் மீறப்பட்ட போதும் அல்லது பலவீனமானவர்கள் ஒடுக்கப்பட்ட போதும், இறைத்தூதர்(ஸல்) அவர்களே முதலில் உறுதியாக நின்று நீதியைக் கோரினார்கள்.

சகோதரர்களே! நமது உறவுகளில் **மென்மையை** வளர்ப்பது குறித்த இரண்டு நினைவூட்டல்களை இந்தக் "குத்பா" பிரசங்கத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. அவை பின்வருமாறு:

முதலாவதாக: மென்மை என்பது நாம் முன்னுரிமை அளிக்கும் ஒரு தேர்வாக இருக்க வேண்டும்

முரட்டுத்தனமாக நடந்துகொள்ளாமல் நம்மால் கருத்து வேறுபாடு கொள்ள முடியும். நமக்கு எதிரான ஒவ்வொரு தூண்டுதலுக்கும் **கடுமைக்கும்** பதிலாக **மென்மையாக** நாம் பதிலளிக்க முடியும், மேலும் கருணைச் சிந்தனையைத் தியாகம் செய்து விடாமல் அதாவது, விட்டு விடாமல் நமது கொள்கைகளைப் பாதுகாக்க முடியும். **கடினமான** சூழ்நிலைகளிலும் கூட, ஞானத்துடன் **பதிலளிக்க மென்மைத் தன்மை** நம்மை அழைக்கிறது.

இரண்டாவதாக: பச்சாதாபமும் கிருபைச் சிந்தனையும் மென்மையை உருவாக்குகின்றது.

குறிப்பாக, யாருடைய வழிமுறைகளை அல்லது கருத்துக்களை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லையோ, அவர்களிடம் நாம் எவ்வாறு **மென்மையைக்** காட்டுவது? எனக் கேட்கலாம். அதற்கான ஒரு வழி, நமது சொந்தக் கண்ணோட்டத்தின் வரம்புகளை நாம் உணர்ந்து, மற்றவர்களின் பார்வையின் மூலம் விஷயங்களைப் பார்க்கக் கற்றுக் கொள்வதாகும்.

உதாரணமாக, கடுமையாக நடந்துகொள்ளும் அனைவரும் கட்டாயம் பண்பற்றவராகவோ அல்லது ஆணவம் கொண்டவராகவோ இருப்பார்கள் எனக் கூற முடியாது. ஏனெனில், அவருடைய பார்வைகளையும் குணத்தையும் எது வடிவமைத்துள்ளது என்பது நமக்குத் தெரியாது. நாம் அவருடைய நடத்தையைப் பார்க்கிறோம், ஆனால் அவருடைய வாழ்க்கைப் பயணத்தை அறிந்துகொள்ளும் திறனிலிருந்து நாம் மறைக்கப்பட்டுள்ளோம். இது, தீர்ப்பளிப்பதில் அதிக எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும் நம்மை இருக்கச் செய்கிறது. எனவே, **பதிலளிக்கும்**போது **மென்மையே** நமது முதல் தேர்வாக இருக்க வேண்டும்.

தனக்குத் தீங்கு செய்த ஒரு கிராமத்து மனிதரை எதிர்கொண்டபோது, ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கையாண்ட அணுகுமுறை இதுவே ஆகும். அந்த மனிதர் மிகுந்த தவிப்பிலும் உதவி தேவைப்பட்ட நிலையிலும் இருந்தார் என்பதை இறைத்தூதர்[ஸல்] அவர்கள் புரிந்துகொண்டார்கள். எனவே, புன்னகைத்து, அவருக்கு உதவி அளிக்குமாறு கட்டளையிட்டார்கள்.

வெள்ளிக்கிழமையில் ஒன்றுகூடியுள்ள ஜமாஅத்தார்களே அல்லாஹ் உங்கள் மீது கிருபை காட்டுவானாக!

இன்றைய உலகம் பகைமை, வெறுப்பு, பிளவு மற்றும் மோதல்களால் நிரம்பியுள்ளது. எனவே, பிணக்குகள் மற்றும் சண்டை, சச்சரவுகளின் தீயை மேலும் தூண்டிவிடும் குரல்கள் நமக்குத் தேவையில்லை. அவற்றுக்குத் தீர்வாக விளங்கி, நல்லிணக்கம் மற்றும் அமைதியைக் கொண்டு வருபவர்களே நமக்கு அதிகம் தேவை.

எனவே, இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களால் தொடங்கப்பட்ட அமைதியின் வழிகாட்டியாகத் திகழும் பயணத்தை நாம் தொடர்வோம். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விரும்பத்தகாத எதிர்மறைச் சூழல்களிலும் கூட, எப்போதும் **மென்மையையும்** பரிவையும் வெளிப்படுத்தினார்கள்.

நமது அன்றாட வாழ்வில் சாந்தத்தையும் **மென்மையையும்** கடைப்பிடிப்பதற்கான ஞானத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. ஆமீன், யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.